மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 02 | குரல்: 130 | வள்ளுவர் ஆண்டு 2054 | புதன்கிழமை 11.01.2024

# இராணுவத்தினரிடம் சரணடைந்த த.வி.பு போராளிகளுக்கு நடந்தது என்ன!



பக்கம் 2



பக்கம் 2

# இனியாவது நாட்டுப்பற்றுடன் செயற்படுங்கள்!

தென்னிலங்கை அரசியல் சமூகத்திற்கு சுரேஷ் அறைகூவல்

# மீண்டும் ஒரு இன அழிப்பு

## புதிய சட்டங்களால் தமிழர்களுக்கு காத்திருக்கின்றது!

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



பக்கம் 2

## ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை: இலங்கையுடன் கை கோர்க்கும் சுவிஸ் அரசு!



பக்கம் 2

## அரை நூற்றாண்டுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் நினைவேந்தல்!



பக்கம் 2

# பொலன்னறுவை மட்டக்களப்பு வீதி மறு அறிவித்தல் வரை மூடப்படும்!!

பொலன்னறுவை மட்டக்களப்பு வீதி வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை மட்டக்களப்பு வீதியின் குறுக்கே கல்லெல்ல பாலத்திற்கு அருகில் சுமார் ஒரு அடி நீர்மட்டம் காணப்படுவதாகவும், அதனை கருத்திற்கொண்டு மறு அறிவித்தல் வரை கல்லெல்ல பகுதியிலிருந்து வீதி மூடப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் அறிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக மகாவலி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாணிக்க கங்கை நிரம்பி வழிவதால், யால பூங்காவின் திஸ்ஸமஹாராம, பலட்டுபான பிரதான நுழைவாயிலை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 06 சுற்றுலா பங்களாக்களும் மூடப்பட்டுள்ளதாக பூங்காவின் பொறுப்பாளர் மனோஜ் வித்யாரத்ன குறிப்பிட்டுள்ளார்.



# மீண்டும் ஒரு இன அழிப்பு! புதிய சட்டங்களால் தமிழர்களுக்கு காத்திருக்கின்றது!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!



தற்போதைய அரசாங்கத்தால் உத்தேச சட்டங்களாக கொண்டுவரப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலமும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலமும் பாராளுமன்றத்தில்நிறைவேற்றப் படுமாயின் மீண்டும் ஒரு தமிழின அழிப்பு நடைபெறுவதை யாராலும் தடுக்க முடியாது.

பழைய பயங்கரவாத தடைச்சட்டம் பெயர் மாற்றப்பட்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக கொண்டு வரப்படுவதற்கு அப்பால் அரசாங்கத்திற்கு எதிராக நடைபெறும் ஜனநாயக போராட்டங்களையும் பயங்கரவாதமாக பார்க்கும் சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன தமிழர் பகுதியில் சிங்கள ஆட்சியாளர் மேற் கொள்ளும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக தமிழர்கள் மூச்சுக் கூட விடமுடியாத சூழ்நிலை உருவாகும்.

நிகழ்நிலை காப்புச் சட்டம் அரசாங்க செயற்பாடுகளை விமர்சித்தால் அதனை ஊடகங்களில் பதிவு செய்தால் போன்றவற்றுக் எதிராக கருத்து வெளியிட்ட நபரை அல்லது குழுவை சிறையில் தள்ளும். இது ஒன்று இதனை விட மேலும்பல மோசமான சரத்துக்கள் உள்ளன.

இரண்டு உத்தேச சட்டங்களும் நாட்டு மக்கள் அனைவருக்கும் பாதிப்பாக இருந்தாலும் தமிழ்ர்களை இது முதன்மையாக குறி வைக்கும் காரணம் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை எப்படி பயங்கவாத தடைச்சட்டம் கருவறுத்து முள்ளிவாய்க்காலில் பாரிய தமிழின அழிப்பை ஏற்படுத்தியதோ எஞ்சி மீதியை ஜனநாயகம் என்ற போர்வையில் இந்த இரண்டு சட்டங்களும் அடக்கி தொங்கி நிற்கும் இருப்பையும் கபளீகரம் செய்து மீண்டும் ஒரு தமிழின அழிப்பை ஏற்படுத்த தயாராகிறது.



# தேராவில் குளத்தின் மேலதிக நீரினை வெளியேற்ற திட்டம்! தேக்கங்காட்டு வீதியினை ஊடறுத்து நீரினை கொண்டு செல்ல தீர்மானம்!





வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளின் அசமந்த போக்கு காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேராவில் குளத்தின் மேலதிக நீர் வெளியேறுவதற்கான வழிகள் மறிக்கப்பட்டதால் குளத்தின் நீர் நிரம்பி குளத்தினை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் கனமழை ஓய்ந்து பல நாட்கள் கடந்தும் வெள்ளத்துக்குள் வாழ்ந்து வரும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு வீதிகள் குளத்தின் மேலதிக நீர் நிரம்பி காணப்படுவதால் போக்குவரத்து செய்வதிலும் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்தாகவும் இதற்கான தீர்வினை உடனடியாக பெற்றுத்தருமாறும் ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்திருந்தனர்

தேராவில் குளக்கரையினை அண்டிய 10 ற்கு மேற்பட்ட குடும்பங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதுடன் தேராவில் முதன்மை வீதி குளத்து நீரினால் மூழ்கி காணப்படுவதால் வீதியால் செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன் கிராமத்திற்கு செல்லும் சிறு வீதிகள் பலவும் குளத்து நீரினால் மூழ்கியுள்ளதால் அந்த வீதிகளாலும் செல்ல முடியாத வகையில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தேராவில் குளம் விவசாய செய்கைக்கு உட்படுத்தப்படாத குறிப்பாக வயல் நிலங்கள் அற்ற மூங்கிலாறு,தேராவில் கிராமத்திற்கு பொதுவாக காணப்படும் ஒரு சிறிய குளம் ஆகும் இந்த குளத்தினை மீன்பிடி நடவடிக்கைக்காகவும் நிலத்தடி நீரை பாதுகாக்கும் நோக்காகவும் கால்நடைகளுக்கான நீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் மக்கள் பயன்படுத்துகின்றனர்

இந்த குளக்கட்டின் மேலாகவே பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதி அமைந்திருந்தது. குறித்த குளத்தின் மேலதிக நீர் வெளியேறக்கூடிய வகையில் குளக்கட்டில் பாலம் அமைக்கப்பட்டு மேலத்திக நீர் அருகிலுள்ள தேக்கங்காட்டின் ஊடாக வெளியேறி பிரமந்தனாறு குளத்துக்கு செல்வது வழமையாக இருந்தது.

இவ்வாறான நிலையில் கடந்த 2008 ம் ஆண்டு மழை காலத்தில் குறித்த குளக்கட்டில் வாகனம் ஒன்று பழுதடைந்து வீதி தடைப்பட் டபோது அருகில் இருந்த தேக்கங்காட்டின் ஊடாக தேக்க மரக்கன்றுகள் அகற்றப்பட்டு தற்காலிகமாக வீதி ஒன்று உருவாக்கப்பட்டது

2009 ம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த தேக்கங்காட்டு பகுதியில் இலங்கை இராணுவத்தின் 681 வது படைப்பிரிவினர் நிலைகொண்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளதோடு தேக்கங்காட்டின் ஊடாக தேக்க மரக்கன்றுகள் அகற்றப்பட்டு தற்காலிகமாக உருவாக்கப்பட்ட வீதியே நிரந்தர பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியாக காபற் இட்டு செப்பனிடப்பட்டுள்ளது இந்த புணரமைப்பு பணியின் போது வீதி நிலமட்டத்திலிருந்து உயர்த்தப்பட்டதோடு தேராவில் குளத்தின் மேலதிக நீர் வெளியேறுவதற்க்கான பாலம் எதுவும் அமைக்கப்படவில்லை

இந்நிலையில் நீண்ட காலத்தின் பின்னர் கிடைத்த கன மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் குளத்தின் மேலதிக நீர் வெளியேற வழியில்லாததால் குளம் நிரம்பி அதனை அண்மித்த மக்களின் காணிகள்,வீடுகள்,வீதிகளுக்குள் குளத்து நீர் சென்றுள்ளதால் மக்கள் இன்று தங்கள் அன்றாட வாழ்வினை கொண்டு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.எனவும் இதற்கான தீர்வினை உடனடியாக பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்

ஊடகங்களில் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் குளத்து நீரினை வெளியேற்றுவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தன் தலைமையில் உடையார் கட்டு தெற்கு கிராம சேவையாளர் அலுவலத்தில் கடந்த 9 நடை பெற்றுள்ளது.

இதில் வீதிஅபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை , விவசாய திணைக்களத்தினர், வனவளப்பிரிவினர் பிரதேச செயலக அதிகாரிகள்,பிரதேச சபை அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு கலந்துரையாடி குறித்த இடத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளதுடன் குளத்து நீரினை வெளியேற்றுவதற்கான திட்டங்கள் இதன்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 முதல் மீண்டும் முல்லைத் தீவில் தொடர்ந்தும் மழை பெய்துவரும் நிலையில் குளத்தின் மேலதிக நீரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை உடனடியாக மூங்கிலாறு ஆரம்ப பாடசாலையில் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்க தீர்மானிக்கப்பட்டு கிராம சேவையாளர்களுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்து குடிநீர் பிரச்சினை சுகாதார பிரச்சினையி னை உள்ளிட்டவற்றை எதிர்கொண்ட 15 குடும்பங்கள் இவ்வாறு மூங்கிலாறு ஆராம்ப பாடசாலையில் இடைத்தங்கல் முகாம் அமைத்து தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான நிரந்த தீர்வாக தேக்கங்காட்டின் ஊடாக அமைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் பிரதான வீதியில் மக்களால் பாலம் அமைக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்ட வீதியின் குறுக்காக தற்காலிகமாக கொட்டு ஒன்று வைத்து நீரினை வெளியேற்றுவதற்கான திட்டம் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் உள்ளூர் போக்குவரத்து பாதிப்பு!





மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த தினம் 9 காலை 9.30 மணியிலிருந்து கடந்த 24 மணித்தியால காலப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வெள்ள நீர் அதிகரித்து வருவதனால் உள்ளூர் போக்குவரத்து தொடர்ந்தும் பாதிக்கப் பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் மாவட்டத்தின் பல பகுதிகளில் பிரதான கால்வாய்கள், ஆறுகள், மற்றும் தாழ்நில பிரதேசங் களில் உள்ள மற்றும் போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவு றுத்தப்படுகின்றனர்.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செய லாளர் பிரிவில் புலிபாஞ்சகல் கோஸ்வே மற்றும் கிண்ணயடி தொடக்கம் பிரம்படித்தீவு போக்கு வரத்து பாதிக்கப்பட்டுள்ளதனால் இரண்டு படகு சேவைகளை மேற்கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு படகுப் போக்குவரத்து இடம் பெற்று வருகின்றது. .

ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் ஈரலக்குளம் மற்றும் மயிலவெட்டுவான் பகுதியிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் சித்தாண்டி தொடக்கம் பெருமாவெளி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதால் அங்கும் இரண்டு படகுசேவைகள் படகு சேவைகள் இடம்பெற்றது.

கோறளைப்பற்று வடக்கு வாகரையில் ஆற்று வெள் ளம் காரணமாக கல்லரிப்பு பிரதேச போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் தலா ஒரு உழவு இயந்திர சேவை மற்றும் படகுசேவைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுணதீவு வாவியில் இரண்டு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு!!



வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாந்தீவு வாவியில் ஆனொருவரின் சடலம் மீட்கப்பட்டுள் ளதாக வவுணதீவு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த முன்தினம் படகில் மீன்பிடிக்க சென்ற நபர் இரண்டு தினங்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றைக்கு முன்தினம் மாலை வேளையில் வவுணதீவு வாவிக்கு மீன்பிடி தொழிலிற்காக சென்றவரே இரண்டு தினங்களின் பின்னர் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஈச்சந்தீவு, நாவற்காடு பகுதியை சேர்ந்த 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுந்தரன் விமலகாந்தன் என்ற மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாந்தீவை அண்டிய வாவியிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைவாக சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp
+94 76 567 3339

# அரை நூற்றாண்டுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் நினைவேந்தல்!





ஐம்பது வருடங்களுக்கு முன்னர் வடக்கில் நடைபெற்ற சர்வதேச மாநாடு ஒன்றின் போது பொலிஸார் சுட்டுக் கொலை செய்த ஒன்பது பேர் யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டனர்.

1974ஆம் ஆண்டு இடம்பெற்ற, நான்காவது சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் நிறைவு நாளில், பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழந்த ஒன்பது பேரின் நினைவாக, யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில், தமிழ் மக்களின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அஞ்சலி செலுத்தியதாக எமது பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் நேற்று (10)காலை இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் கலந்துகொண்டார்.

## 50றக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்

1974ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர்களின் பங்களிப்பில் ஆரம்பமாகி ஒருவாரம் இடம்பெற்ற, நான்காவது சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளில், பிரபல தமிழ்நாட்டு அறிஞர் பேராசிரியர் நைனா மொஹமட் தனது சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தபோது, அத்துமீறி நுழைந்த யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ். கே. சந்திரசேகர தலைமையிலான பொலிஸ் குழு துப்பாக்கிச் சூடு நடத்தியது.

மாநாட்டை கொழும்பில் நடத்த வேண்டும் என சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் வலியுறுத்திய போதும் தடைகளை மீறி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்தனர்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாகக் கட்டப்பட்டிருந்த மேடைக்கு முன்னால் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மீது ஜீப் மற்றும் வேன்களில் வந்த பொலிஸார் பொல்லுகளாலும், துப்பாக்கிகளாலும் தாக்கியதாக மாநாட்டின் மீதான தாக்குதலில் தப்பியவர்கள் பிற்காலத்தில் தெரிவித்திருந்தனர்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு காரணமாக அறுந்து விழுந்த மின்கம்பிகள் தாக்குதலில் இருந்து தப்பிக்க ஓடிக்கொண்டிருந்த மக்கள் மீதும் விழுந்தன.

பொலிஸாரின் தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர், நகரைச் சுற்றியுள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டன, மேலும் 50றக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

## பொலிஸ் சேவையே அன்றி படையணி அல்ல

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ஒஸ்வல்ட் லெஸ்லி டி க்ரெஸ்டர் தலைமையிலான மூவர் அடங்கிய ஆணைக்குழு, தமது கடமைகளை சரியாக புரிந்து கொள்ளாமல் பொலிஸார் நடத்திய தாக்குதலை நியாயப்படுத்த முடியாது எனத் தீர்மானித்தது.

"பொலிஸ் பணி எனப்படுவது சேவையே அன்றி படையணி அல்ல என்பதை அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்" என ஆணைக்குழுவின் 'ஜனவரி 10 சோகம்' அறிக்கை குறிப்பிடுகின்றது.

உச்ச நீதிமன்ற நீதியரசர் வி.மாணிக்கவாசகர் மற்றும் யாழ்ப்பாண முன்னாள் பேராயர் சபாபதி குலேந்திரன் ஆகியோர் அடங்கிய ஆணைக்குழு 1974ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது "இந்த இரவில் (ஜனவரி 10, 1974) நிராயுதபாணியான குடிமக்கள் மீது வன்முறை மற்றும் தேவையற்ற தாக்குதலை நடத்தியதற்கு பொலிஸார் குற்றவாளிகள் என்பது நாம் அடைந்த தவிர்க்க முடியாத தீர்மானம். மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளில் கூட விவேகத் துடன் செயற்படும் ஒரு சிவில் பொலிஸ் படையிடம் எதிர்பார்க்கப்படும் சரியான தீர்மானம் அவர்களிடம் இல்லை என்பது எங்கள் ஆழ்ந்த கவலை.

ஒரு பொலிஸ் அதிகாரி எடுத்த முற்றிலும் தவறான மற்றும் பொறுப்பற்ற தீர்மானத்தால் தூண்டப்பட்ட நிகழ்வுகளின் சங்கிலியால் உடல் சேதம், சொத்து சேதம் மற்றும் உயிர் உயிர் சேதம் ஏற்பட்டது.

பாதுகாப்பற்ற மற்றும் அப்பாவி குடிமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பொலிஸ் தாக்குதலை நியாயப்படுத்த முடியாது."





# கோவையில் தமிழ் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட இருபத்தைந்து அடி உயர திருவள்ளுவர் சிலை!



கோவை மாநகராட்சியில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மாநகராட்சியில் ஏழு குளங்கள் சீரமைக்கப்பட்டு உள்ளன. அதன் தொடர்ச்சியாகக் கோவை பொள்ளாச்சிச் சாலை குறிச்சி குளம் பகுதியில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. குறிச்சி குளத்தைச் சுற்றிலும் மின் விளக்குகள், நடைபாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றி தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில், ஜல்லிக்கட்டு விளையாட்டு சிலைகள், பாரம்பரிய நடனம், தமிழர் விழா பொங்கல், ஏர் உழும் வண்டிகள் ஆகியவற்றின் மாதிரி சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகக் குறிச்சி வட்டப்பாதையின் மையத்தில் தமிழ் எழுத்துகளால் ஆன திருவள்ளுவர் சிலை அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது.

இந்த சிலை 25 அடி உயரமும், 15 அடி அகலமும், 20 அடி நீளமும், 2.5 டன் எடையும் கொண்டது. திருவள்ளுவரின் 1,330 திருக்குறள்களைப் போற்றும் வகையில், 1,330 தமிழ் எழுத்துக்களைக் கொண்டு இந்த சிலை உருவாக்கப்பட்டுள்ளது. அதில் 247 எழுத்துக்கள் மீண்டும் மீண்டும் உபயோகிக்கப்பட்டுள்ளன. சிலையின் முன்பு திருவள்ளுவரின் முதல் குறளான,

**‘அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு”**

என எழுதப்பட்டுள்ளது. திருவள்ளுவர் சிலையின் நெற்றியில் அறம் என்ற வார்த்தை இடம்பெற்றுள் ளது குறிப்பிடத்தக்கது. திருவள்ளுவரின் வலக் கையில் ”எழுத்தாணி“, இடக் கையில் ”ஓலைச் சுவடி“ ஆகியவற்றை ஏந்தியிருக்கிறார். தமிழ் எழுத்துகளான 12 உயிர் எழுத்துகள், 18 மெய் எழுத்துகள், 216 உயிர்மெய் எழுத்துகள், ஒரு ஆயுத எழுத்து என மொத்தம் 247 எழுத்துகளை தூய எஃகினால் செய்து அவற்றை ஒன்றுடன் ஒன்றைப் ”பற்றவைக்கும் ““ முறையில் மூலம் இணைத்து திருவள்ளுவர் சிலையை உருவாக்கி யுள்ளனர். மழையையும், வெயிலை யும் தாங்கும் வகையில், துருப்பிடிக்காத வகையில் தூய எஃகினால் இந்த சிலை அமைக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவருக்குத் தமிழ் எழுத்துக்களால் சிலை வைப்பது நாட்டிலேயே இது தான் முதல் முறை. மாலை மற்றும் இரவு நேரங்களில் விளக்குகளால் ஜொலிக்கும் வண்ணம் இச்சிலை வடிவமைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மலையக தியாகிகளின் நினைவுதினம் யாழ் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிப்பு!

மலையக தியாகிகளின் நினைவுதினம் நேற்று (10) யாழ்ப்பாண பல்கலைக்கழக பொதுத் தூபியில் நடைபெற்றது.

மலையகத்தில் படுகொலை செய்யப்பட்ட உறவை களையும், உரிமைக்காக போராடி உயிர்நீத்த உறவைகளையும் நினைவுகூர்ந்து இந்த நினை வேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது ஈகைச் சுடரேற்றப்பட்டு, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது பல்கலைக் கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களால் உரைகள் ஆற்றப்பட்டன. யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாண வர்கள் மற்றும் பேராசிரியர் கள் கலந்துகொண்டனர்.





# இனியாவது நாட்டுப்பற்றுடன் செயற்படுங்கள்

## தென்னிலங்கை அரசியல் சமூகத்திற்கு சுரேஷ் அறைகூவல்



நாட்டின் அந்நிய செலாவணியை சேமிப்பதற்கும் விவசாயத்தைத் தொழிற்சாலையாக மாற்றுவதற்கும் உழைத்த வடக்கு-கிழக்கின் பொருளாதார வளங்களை அழித்துவிட்டு அதற்காக ஒரு வருத்தம்கூட தெரிவிக்காதவர்கள் நேற்று வடக்கின் பொருளாதார அபிவிருத்தி குறித்து பேசுவது தேர்தல் பிரச்சாரத்திற்காக மட்டுமே. தென்னிலங்கை அரசியல் சக்திகளிடத்தில் அனைத்து தேசிய இனங்களையும் ஐக்கியப்படுத்தி நாட்டுப்பற்றுடன் இலங்கையை வளமிக்க நாடாக மாற்றுவதற்கான எந்தத் திட்டமும் இல்லை என்பதும் நாட்டு மக்களை பிளவுபடுத்தி தமக்கான வாக்கைப் பெற்றுக் கொள்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதும் ஜனாதிபதியின் அண்மைய வடமாகாண விஜயமும் நிரூபித்துள்ளது.

ஜனாதிபதியின் வடமாகாண விஜயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தனது இரண்டாவது ஆண்டின் துவக்கத்தில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களை நடாத்துவதற்காகவும் ஏனைய சந்திப்புக்களை நிகழ்த்துவதற்காகவும் வடக்கு மாகாணத்திற்கு கடந்த 04.01.2024 முதல் 08.01.2024 வரை விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

அவரது வருகை தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன. மிச்சம் மிகுதியாக உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முடிவுகள் எட்டப்படவேண்டும், காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும். பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபை தேர்தல்கள் நடைபெறவேண்டும்.

பௌத்த சிங்களமயமாக்கலை நோக்கமாகக் கொண்டு தமிழர் பிரதேசங்களில் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படும் பௌத்த கோயில்களின் பணிகள் நிறுத்தப்படவேண்டும். இவை தொடர்பில் ஜனாதிபதி தெளிவான பதிலை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த விடயங்கள் தொடர்பாக அவர் தமது விஜயத்தின்போது மேற்குறிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எந்தவிதமான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களையோ தெளிவுபடுத்தல்களையோ மேற்கொள்ளவில்லை. அவர் தொடர்ச்சியாகப் பேசிவரும் அபிவிருத்தி தொடர்பில் மாத்திரமே பேசினார். இதற்கு முன்னரும் அபிவிருத்தி தொடர்பில் அவர் பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கின்றார். ஆனால் அவற்றுக்கான முறையான நிதி ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இந்த அரசாங்கத்தின் மேல் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. ஜனாதிபதிக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் கடந்தகாலத்தை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

யுத்தத்திற்கு முன்பாக, முழு இலங்கைக்கும் தேவையான விவசாய உற்பத்திகளையும் கடல் உணவுகளையும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பெருமளவில் வழங்கிவந்தன. முப்பது வருட யுத்தத்தில் எமது விவசாயம் முற்றாக அழிக்கப்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தார்கள். விவசாயக் காணிகள் தரிசு நிலங்களாகவும் காடாகவும் மாறியது. இருந்த ஒருசில தொழிற்சாலைகளும் யுத்தத்தைக் காரணம்காட்டி அழித்தொழிக்கப்பட்டன. முழு இலங்கைக்கும் உணவளித்த மக்கள் தமக்கே வாழ்வாதாரம் இல்லாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அந்த மக்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு வழிசமைத்துக்கொடுக்க வேண்டிய அரசாங்கம் அதுதொடர்பில் எத்தகைய பிரத்தியேக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி, காடாக மாறியுள்ள அவர்களது காணிகளை விடுவிப்பதற்கே அவர்கள் கடந்த பதினான்கு வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

இந்த இலட்சணத்தில்தான், சிங்கள அரசாங்கத்தின் செயற்பாடு இருக்கின்றதென்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும். யுத்தத்திற்குப் பின்னர், வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அரசாங்கத்தின் உதவிகள் ஏதுமின்றி, தமது வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைமுறையையும் தாமே கட்டியெழுப்பிக்கொள்வதற்காக வைராக்கியத்துடன் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். யதார்த்தங்கள் இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி குறிப்பிடுகின்ற வடக்குமாகாண அபிவிருத்தி என்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை நாங்கள் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேசமயம், தமிழ்க் கட்சிகள் முன்வைத்த பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாசைகளை நிறைவேற்றுவது தொடர்பில் எந்தவிதமான ஆணித்தரமான பதில்களும் அளிக்காமல் பதின்மூன்றாவது திருத்தம் என்பது பொருளாதார அபிவிருத்திக்குப் போதுமானது என்ற கருத்தை மாத்திரம் கூறிச்சென்றிருக்கின்றார்.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை மையமாகக் கொண்டது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மாகாணசபை தேர்தல்களை நடாத்தாமல் இருப்பதுடன், பதின்மூன்றாவது திருத்தத்தினூடாக மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் மீளவும் மத்திய அரசால் பறிக்கப்பட்டும் இருக்கின்றது. இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது முக்கியமானது. இவை இல்லாமல், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒருபொழுதும் சீராக நடைபெறாது. வெளிநாட்டு முதலீடுகளையும் அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

இதனைப் புரிந்துகொண்டு மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தி, அதற்குரித்தான முழுமையான அதிகாரங்களை வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாண அரசுகளுக்கு வழங்குவதன் மூலமே இலங்கையின் பொருளாதரமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் வலுவடையும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கொழும்பிலும்சரி, யாழ்ப்பாணத்திலும்சரி புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகள் அவசியம்

தொடர்ச்சி 08 பக்கம்

# இனியாவது நாட்டுப்பற்றுடன் செயற்படுங்கள்

## தென்னிலங்கை அரசியல் சமூகத்திற்கு சுரேஷ் அறைகூவல்



என்பதை மீண்டும் மீண்டும் கூறிவருகின்றார். கடந்த காலங்களில் தென்பகுதியிலிருந்த தமிழ் மக்களின் பொருளாதாரம் என்பது அடிக்கடி அரசாங்கம் உருவாக்கிய இனக்கலவரங்களினால் நிர்மூலம் செய்யப்பட்டது.

இதன் காரணமாக, பல இலட்சம் கோடி மதிப்புள்ள சொத்துகளை தமிழ் மக்கள் இழந்து அகதிகளாகக் கப்பலேற்றி அனுப்பப்பட்ட வரலாறுகள் தமிழ் மக்களுக்குண்டு. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல், அவற்றை எதிர்பார்ப்பதென்பது தமிழ் மக்களை மேலும் மேலும் முட்டாள்கள் என்று நினைப்பதற்கு ஒப்பாகும்.

மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் போன்றவற்றை வழங்கி, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதனூடாகத்தான் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளுக்கு பாதுகாப்புக் கிட்டும் என்பதை ஜனாதிபதியும் அவருடைய தலைமையிலான அரசும் புரிந்துகொள்ள வேண்டும். இதை வழங்குவதனூடாக ஜனாதிபதி குறிப்பிடும் வடக்கை பொருளாதார மையமாக மாற்றலாம் என்பது மட்டுமன்றி, தென் ஆசியாவின் நிதி ஆதார மையமாகவும் மாற்றமுடியும்.

இவை ஒருபுறமிருக்க, யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்த நிலையில், தமிழ் மக்கள் தமது காணிகளை முழுமையாக விடுவிக்கக் கோரிவருகின்ற போதிலும், இன்னமும் அது முழுமையடையவில்லை. இப்பொழுதும்கூட இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களது நிலங்கள் காணிகளை முப்படையினரும் பலாத்காரமாக தம்வசம் வைத்திருக்கின்றனர். அவை விடுவிக்கப்படவேண்டுமாயின், ஜனாதிபதிதான் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, மாவட்ட செயலாளர்களோ ஏனைய அதிகாரிகளோ எடுக்க முடியாது. 2025ஆம் ஆண்டுக்குள் மீள்குடியேற்றம் முழுமைபெற வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி, காணிகளை விடுவிப்பதற்கான ஆக்கபூர்வமான அறிவுறுத்தல்களோ நடவடிக்கைகளோ எடுக்க வில்லை என்பதுதான் யதார்த்தமானது. இத்தகைய சூழ்நிலையில், அவர் குறிப்பிட்ட காலத்திற்குள் மீள்குடியேற்றங்கள் பூரணப்படுத்தப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

அதனைப் போலவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக யுத்தம் முடிந்த காலத்திலிருந்து இன்று வரை அந்த மக்கள் போராடி வருகின்றபோதிலும் கூட அவர்களை சந்தித்துப் பேசுவதற்கோ அல்லது அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்திலோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், ஜனாதிபதியை சந்திக்க முயற்சித்த தாய்மார்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது என்பது மிக மோசமான செயற்பாடாகும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் நீண்ட போராட்டத்திற்கு மதிப்பளிக்காதது மட்டுமல்ல அவர்களது உறவினர்களின் இருப்பு தொடர்பில் அவர்கள் அறிந்துகொள்வதற்கான நீதியும் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இத்தகைய வார்த்தை ஜாலங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியாகத் தென்படுகிறதே தவிர, ஜனாதிபதியின்மீதோ அவரது தலைமையின் மீதான அரசின்மீதோ நம்பிக்கை கொள்வதற்கு இடமளிக்கவில்லை. அரசாங்கத்தின் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள்தான் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது.







# இராணுவத்தினரிடம் சரணடைந்த முக்கிய போராளிகளுக்கு நடந்தது என்ன!

## சபையில் சிறீதரன் சீற்றம்



சிறிலங்கா இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களான பாலகுமாரன் அவரது மகன் சூரியகுமாரன் உட்பட பல போராளிகளுக்கு என்ன நடந்தது என்பதை இராணுவமோ அரசாங்கமோ இதுவரை வெளியிடவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், “3 இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர், 60ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் துடைத்தெறியப்பட்டுள்ளனர்.

**இராணுவத்திடம் சரணடைந்தவர்கள்**

ஜே.வி.பியின் 60ஆயிரம் வரையிலான போராளிகளும் கொடூரமாக கொல்லப்பட்டிருந்தனர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வரலாறு ஒரு இரத்தம் படிந்த வரலாறு ஆகும்.

பலமுறை இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படுவதாக அரச தலைவர்கள் கூறினார்கள், ஆனால், இவ்வித மாற்றங்களையும் செய்யவில்லை.

இராணுவத்திடம் சரணடைந்தவர்களுக்கு இன்றுவரை என்ன நடந்ததென தமிழ் மக்கள் தெரியாதுள்ளனர்.

**போராளிகள்**

அவர்களது உறவுகள் இன்றும் நீதிக்காக போராடுகின்றனர், அருட்தந்தை பிரான்ஸிஸ் தலைமையில் பல போராளிகள் இராணுவத்திடம் சரணடைந்தனர் இதனை கண்கண்ட சாட்சியங்களும் உள்ளனர்.

ஆனால், அவர்களுக்கு என்ன நடந்ததென தெரியவில்லை. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான பாலகுமாரன் அவரது மகன் சூரியகுமாரன் உட்பட பல போராளிகள் சரணடைந்தனர்” எனக் கூறியுள்ளார்.

# ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை: இலங்கையுடன் கை கோர்க்கும் சுவிஸ் அரசு!

## எம்பிக்கள் சரமாரி கேள்வி



ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கை அரசுடன் சுவிஸ் அரசாங்கம் இணைந்து செயல்படுவதற்கு எதிராக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரமாரியான கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு இனவெறி தாக்குதல்களையும் தமிழின அழிப்புகளையும் இன்று வரை நடாத்தி வருகிறது.

இவ்வாறான சூழலில் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் பன்னாட்டு நீதிகோரி தொடர்ச்சியாக போராடிவருகிறார்கள். இதுதொடர்பில் சுவிட்சர்லாந்து அரசு விரிவான முறையில் ஆராய்ந்து செயற்படாமல் சிறீலங்கா அரசுடன் நெருக்கமான உறவைப் பேணிவருகிறது.

**அரசாங்கத்திற்கு எதிராக கேள்விகள்**

இந்த நிலையில், இலங்கை அரசுடன் சுவிஸ் அரசாங்கம் இணைந்து செயல்படுவதற்கு எதிராக மோலினா ஃபேபியன் தலைமையிலான ஐந்து சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஏழு வெளிப்படையான கேள்விகளை கேட்டுள்ளனர்.

இவ்வாறான சூழலில், சுவிஸ் அரசாங்கத்திற்கு எதிராக கேள்விகளை முன்வைத்த வைத்த ஐந்து சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களை உலகத் தமிழர் இயக்கம் வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக உலகத் தமிழர் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழீழத்தில் சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு, தொடர்ந்து கொண்டிருக்கும் கட்டமைப்புசார் தமிழின அழிப்பு நடவடிக்கைகள், சட்டத்திற்கு முரணான கைதுகள், துன்புறுத்தல்கள், கொலைகள்,காணாமல் ஆக்கப்படுதல் என்பன இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ் மக்களின் உரிமையும் நீதியும் தொடர்ச்சியாக மறுக்கப்படுகின்றன.

**இனப்படுகொலை செய்த இலங்கை அரசு**

இவ்வாறான சூழலில் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் பன்னாட்டு நீதிகோரி தொடர்ச்சியாக போராடிவருகிறார்கள்.

இவைதொடர்பில் சுவிட்சர்லாந்து அரசு விரிவான முறையில் ஆராய்ந்து செயற்படாமல் சிறீலங்கா

# ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை: இலங்கையுடன் கை கோர்க்கும் சுவிஸ் அரசு!

## எம்பிக்கள் சரமாரி கேள்வி



ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கை அரசுடன் சுவிஸ் அரசாங்கம் இணைந்து செயல்படுவதற்கு எதிராக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரமாரியான கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு இனவெறி தாக்குதல்களையும் தமிழின அழிப்புகளையும் இன்று வரை நடாத்தி வருகிறது.

இவ்வாறான சூழலில் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் பன்னாட்டு நீதிகோரி தொடர்ச்சியாக போராடிவருகிறார்கள். இதுதொடர்பில் சுவிட்சர்லாந்து அரசு விரிவான முறையில் ஆராய்ந்து செயற்படாமல் சிறிலங்கா அரசுடன் நெருக்கமான உறவைப் பேணிவருகிறது.

### அரசாங்கத்திற்கு எதிராக கேள்விகள்

இந்த நிலையில், இலங்கை அரசுடன் சுவிஸ் அரசாங்கம் இணைந்து செயல்படுவதற்கு எதிராக மோலினா ஃபேபியன் தலைமையிலான ஐந்து சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஏழு வெளிப்படையான கேள்விகளை கேட்டுள்ளனர்.

இவ்வாறான சூழலில், சுவிஸ் அரசாங்கத்திற்கு எதிராக கேள்விகளை முன்வைத்த வைத்த ஐந்து சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களை உலகத் தமிழர் இயக்கம் வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக உலகத் தமிழர் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழீழத்தில் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு, தொடர்ந்து கொண்டிருக்கும் கட்டமைப்புசார் தமிழின அழிப்பு நடவடிக்கைகள், சட்டத்திற்கு முரணான கைதுகள், துன்புறுத்தல்கள், கொலைகள், காணாமல் ஆக்கப்படுதல் என்பன இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ் மக்களின் உரிமையும் நீதியும் தொடர்ச்சியாக மறுக்கப்படுகின்றன.

### இனப்படுகொலை செய்த இலங்கை அரசு

இவ்வாறான சூழலில் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் பன்னாட்டு நீதிகோரி தொடர்ச்சியாக போராடிவருகிறார்கள்.

இவைதொடர்பில் சுவிட்சர்லாந்து அரசு விரிவான முறையில் ஆராய்ந்து செயற்படாமல் சிறிலங்கா அரசுடன் நெருக்கமான உறவைப் பேணிவருகிறது. இவ்வாறான சூழமைவில் டிசம்பர் 21, 2023 அன்று MOLINA FABIAN தலைமையிலான ஐந்து சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து சுவிஸ் அரசாங்கத்திடம் ஏழு வெளிப்படையான கேள்விகளை எழுப்பியுள்ளனர்.



எழுப்பப்பட்ட கேள்விகள்:

1. நல்லிணக்கத்திற்கு அடிப்படையாக விளங்கும் போர்க்குற்றங்கள் மீதான நீதிவிசாரணையையும் அதன் தொடர்ச்சியான அரசியல் தீர்வையும் நடைமுறைப்படுத்த சுவிஸ் அரசாங்கம் எவ்வாறு ஆதரவு வழங்குகின்றது?
2. நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநாட்டத் தவறிய சிறிலங்கா அரசினால் உருவாக்கப்பட்ட "உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை" பன்னாட்டு மனித உரிமை நிறுவனங்களும், ஐ.நா மனித உரிமை ஆணையாளரும் விமர்சித்திருக்கின்ற சூழலில் சுவிட்சர்லாந்து அரசாங்கம் எவ்வாறு ஆதரவளிக்கிறது?
3. புலம்பெயர் அமைப்பு மற்றும் பௌத்த பிக்குகள் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட "இமயமலைப் பிரகடனத்தை" பெரும் பகுதியான தமிழ் கட்சிகள், பாதிக்கப்பட்ட தரப்புகள், சமூக அமைப்புகள் மற்றும் பல புலம்பெயர் அமைப்புகள் போன்றவற்றால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் சுவிட்சர்லாந்து


தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!

தொலைபேசி :

+94 76 567 3339




கல்வி,சமூக,அரசியல் வாராந்த இதழ்!